## புதுக்கோட்டையில் சிறப்புக் கூட்டம்

புதுக்கோட்டையில் கிளை மாநாட்டையொட்டி 12.07.2014 அன்று தொலைபேசி நிலையத்தில் சிறப்புக் கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. நூற்றுக்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் BSNL ஊழியர் சங்க கொடியினை மாநிலச் செயலர் தோழர் S.செல்லப்பாவும் , TNTCWU சங்க கொடியை மாநில பொருளர் தோழர் K.சீனிவாசனும் எழுச்சிமிகு கோஷங்களுக்கு இடையில் ஏற்றி வைத்தனர்.

புதுக்கோட்டை தோழர்கள் தொலைபேசி நிலையமே சிவக்கும் வண்ணம் செங்கொடிகளால் அலங்கரித்திருந்தனர். சிறப்புக்கூட்டத்திற்கு Urban கிளைத் தலைவர் தோழர் K.நடராஜன் அவர்களும், Rural கிளைத் தலைவர் தோழர் R.ராஜேந்திரன் அவர்களும் தலைமை வகித்தனர். Urban கிளைச் செயலர் தோழர் P.ஆறுமுகம் வரவேற்புரை நிகழ்த்தினார்,

மாவட்ட செயலர் தோழர் S.அஸ்லாம் பாட்ஷா, உழைக்கும் மகளிர் ஒருங்கிணைப்புக் குழு கன்வீனர் தோழியர் M.மல்லிகா, மாநில பொருளர் தோழர் K.சீனிவாசன், மாவட்டத் தலைவர் தோழர் T.தேவராஜ், ஒப்பந்த ஊழியர் மாநில செயற்குழு உறுப்பினர் தோழர் R.கல்லடியான் மற்றும் TEPU சங்க மாநிலகுழு உறுப்பினர் தோழர் C.பன்னீர் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

இறுதியாக மாநிலச் செயலர் தோழர் S.செல்லப்பா சிறப்புரை ஆற்றினார். மோடி அரசின் தொழிலாளர் விரோத செயல்பாடு, பங்கு விற்பனை, அந்நிய முதலீடு, BSNL நிலைமைகள், ஊழியர் பிரச்சனைகள், ஒப்பந்த ஊழியர் பிரச்சனைகள், மாநில அளவில் நடத்தப்பட்ட போராட்டமும் உடன்பாடும் உள்ளிட்ட அம்சங்களை எடுத்துரைத்தார்.

Rural கிளைச் செயலர் தோழர் C.ராஜேந்திரன் நன்றியுரை வழங்கினார்.

### பாராட்டுகிறோம்...

- ஆண்டுதோறும் கிளைமாநாட்டை எழுச்சியுடன் நடத்தும் புதுக்கோட்டை தோழர்களை மாநிலச் சங்கம் மனதார பாராட்டுகிறது.

- திருச்சியில் நடைபெற உள்ள BSNL ஊழியர் சங்க மாநில மாநாட்டை சிறப்புடன் நடத்துவதற்காக புதுக்கோட்டையில் பணியாற்றும் 19 ஒப்பந்த ஊழியர்கள் மாநாட்டு நிதியாக ரூ3500/-ஐ மாநிலச் செயலரிடம் பலத்த கரவொலிக்கிடையில் வழங்கினார்கள். மாநிலச் சங்கம் ஒப்பந்த ஊழியர்களின் உணர்வுமிக்க நன்கொடையை நன்றியுடன் பெற்றுக்கொண்டது.
- புதுக்கோட்டையில் பணியாற்றிய தோழர் C.செந்திவேல், TM, 30.06.2014 அன்று பணி ஓய்வு பெற்றதை தொடர்ந்து மாநிலச் சங்கத்திற்கு பலத்த கரவொலிக்கிடையில் ரூ.5000/- நன்கொடை வழங்கினார். மாநிலச் சங்கம் நெஞ்சு நிறை பாராட்டுக்களை உரித்தாக்குகிறது.





